முதல்வர் அலுவலகம் அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை-641013.

மேற்குறிப்பாணை எண்: 0177 /ஈ3/2025, நாள்: 06 .01.2025

பொருள்: மாணவர் பிரிவு - அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை-13-2024-2025-ஆம் கல்வியாண்டிற்கான மாநில அரசு வழங்கும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்த்துவ ஆதிதிராவிடர் நல கல்வி உதவித்தொகை - **புதியது** (Fresh) விண்ணப்பம் சமர்ப்பித்தல்-தொடர்பாக.

********

இக்கல்லூரியில் 2024-2025-ஆம் கல்வியாண்டில் பி.இ முதலாம் ஆண்டு, நேரடி இரண்டாம் ஆண்டு (Lateral Entry) மற்றும் பிற கல்லூரிகளிலிருந்து இக்கல்லூரிக்கு மாறுதல் (Transfer Students) மூலம் வரப்பெற்ற மாணவர்கள் மற்றும் இதுநாள்வரை கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்காத இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் மற்றும் எம்.இ மாணவர்கள் மாநில அரசு வழங்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மற்றும் மதம் மாறிய கிற்ஸ்த்துவ ஆதிதிராவிடர் (SC/ST/SCC) நல கல்வி உதவித்தொகை (புதியது) விண்ணப்பம் மற்றும் அவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய ஏதுவாக மாதிரி விண்ணப்பங்களை (Model Form) இக்கல்லூரியின் இணையதளப் பக்கத்தில் www.gct.ac.in >News & Events-ல் உள்நுழைந்து புதியது விண்ணப்பங்களை பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் மாணவ/மாணவியர் தங்களின் விவரங்களை பூர்த்தி செய்து, உரிய சான்றிதழ்களுடன் இக்கல்வியாண்டில் கல்லூரியில் செலுத்திய கல்லூரிக் கட்டண ரசீது, விடுதிக் கட்டண ரசீது, ஆதார் அட்டை நகல், இணைத்து புதியது விண்ணப்பம் மற்றும் DATA SHEET-ஐ சரியாக பூர்த்தி செய்து, விண்ணப்பத்தில் புகைப்படம் ஒட்டி அதனுடன் இணைக்கப்பட வேண்டிய உரிய சான்றிதழ்கள் இணைத்து, COVERING LETTER- ஐ முதல்வருக்கு எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து தத்தும் துறையில் (DEPARTMENT) உள்ள கல்வி ஆலோசகர் (FacultyAdvisor) மற்றும் துறைத்தலைவரிடம் (Head of the Department) கையொப்பம் பெற்று 24.01.2025-ஆம் தேதிக்குள் கல்வி உதவித்தொகை பிரிவில் நேரில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. காலாவதியான வருமானச் சான்றிதழ்களை கல்வி உதவித்தொகை பெற சமர்ப்பிக்க வேண்டாம் என மாணவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தபாலில் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டாம் என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. Covering Letter-ஐ இணைத்தனுப்பாத மாணவர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மாறுதல் பெற்று வேறு கல்லூரியிலிருந்து (Transfer Students) இக்கல்லூரியில் சேர்க்கை பெற்ற மாணவர்கள், தங்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை கல்வி உதவித்தொகை பிரிவில் நேரில் வந்து சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கல்வி உதவித்தொகை (புதியது) பெற விண்ணப்பிக்கும் மாணவர்கள் ஆதார் அட்டையில் உள்ளது போன்று தங்களின் பெயர், முகவரி மற்றும் கைப்பேசி எண்ணை விண்ணப்பம் மற்றும் DATA SHEET-ல் எழுத வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

புதியது பெற விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் விண்ணப்பத்துடன் மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழ்களை இணைத்து அனுப்புமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாணவர்கள் மாதிரி விண்ணப்பத்தை பார்த்து தங்களுடைய விண்ணப்பங்களை பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது. விண்ணப்பத்தை சரியாக பூர்த்தி செய்யாத மற்றும் உரிய சான்றிதழ்களை இணைக்காத மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாணவர்கள் பயன்படுத்தும் கைபேசி எண் (Mobile Number) மற்றும் மாணவர்கள் பெயரில் துவங்கப்பட்ட வங்கிக் கணக்கு எண்ணை மட்டுமே கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தில் எழுத வேண்டும். பெற்றோர் அல்லது வேறு நபர்களின் கைபேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண்ணை அளிக்கும் மாணவர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் மாணவர்கள் தங்களது வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை வங்கியில் சென்று இணைத்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**அரசுப்பள்ளியில் பயின்று 7.5% பிரிவில் சேர்க்கை பெற்ற மாணவர்கள் அரசாணை எண்:221-ல் தெரிவித்துள்ளபடி கல்வி உதவித்தொகை பெற தகுதி இல்லாத காரணத்தால், இப்பிரிவின் கீழ் இக்கல்லூரியில் சேர்க்கை பெற்ற மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்க வேண்டாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. துறைத்தலைவர்கள் இம்மாணவர்களின் விண்ணப்பங்களை தங்கள் நிலையிலேயே நிராகரிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.**

மேற்குறிப்பிடப்பட்ட தேதிக்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**மாணவர்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசு வழங்கும் ஏதேனும் ஒரு கல்வி உதவித்தொகை பெற மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

ஒம்/கி.மனோன்மணி
முதல்வர்

இணைப்பு: புதியது விண்ணப்பம், Data Sheet , மாதிரி விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் விவரம்

பெறுநர்

அனைத்து துறைத்தலைவர்கள் UG மற்றும் PG

நகல்

1. அறிவிப்புப் பலகை-அனைத்து விடுதி, அலுவலகம் மற்றும் அனைத்து துறைஅறிவிப்பு பலகைகள்
2. முதல்வரின் நேர்முக உதவியாளர்
3. “ஈ“ பிரிவு கண்காணிப்பாளர் இருப்பு கோப்பு
4. ஈ3 தொகுப் கோப்பு

// ஆணையின்படி அனுப்பப்படுகிறது//

6.1.25
கண்காணிப்பாளர்

06/01/25

# ENCLOSURES

1.COMMUNITY CERTIFICATE

2.INCOME CERTIFICATE

3.AADHAR  CARD COPY

4.ALLOTMENT ORDER

5. Xth MARKSHEET

6.XII th MARKSHEET

7.TRANSFER CERTIFICATE

8.DIPLOMA MARKSHEET (LATERAL ENTRY)